“என் வாக்குச்சாவடி; வெற்றி வாக்குச்சாவடி” இன்று

சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாக வாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் – பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, டிச.16-

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 16.12.2025 செவ்வாய் கிழமை இன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

கொளத்தூர் கிழக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 70, பாகம்: 166, இடம்: எண்.67/1/181, M.H.ரோடு, வடக்கு, பெரம்பூர், சென்னை.

மாலை: 4.30 மணி: வட்டம் 70, பாகம்: 167, இடம்: எண்.27, தாமோதரன் தெரு, பெரம்பூர், சென்னை-11.

மாலை: 5.00 மணி: வட்டம் 70, பாகம்: 168, இடம்: எண்.74, எஸ்.எஸ்.வி. கோயில் 1வது தெரு, மேல்பட்டைடை, பெரம்பூர், சென்னை-11.

மாலை: 5.30 மணி: வட்டம் 70, பாகம்: 169, இடம்: எஸ்.எஸ்.வி. கோயில் 2வது தெரு, மேல் பட்டைடை, பெரம்பூர், சென்னை-11.

கொளத்தூர் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 65அ, பாகம்: 12. இடம்: அம்பேத்கார் நகர், கொளத்தூர், சென்னை-99.

மாலை: 4.30 மணி: வட்டம் 69அ, பாகம்: 221. இடம்: தம்மசாமி தர்கா தெரு, அகரம், சென்னை-82.

மாலை: 5.00 மணி: வட்டம் 69அ, பாகம்: 222. இடம்: செங்கல்வராயன் தெரு, அகரம், சென்னை-82.

மாலை: 5.30 மணி: வட்டம் 65, பாகம்: 40. இடம்: பூம்புகார் நகர் 2வது தெரு, கொளத்தூர், சென்னை-99.

துறைமுகம் கிழக்கு பகுதி

மாலை: 5.00 மணி: வட்டம் 60, பாகம்: 96, 97, 98. இடம்: மீராலி தெரு, போலீஸ் பூத் எதிரில், கிளைவ் பேட்டரி, சென்னை-1.

துறைமுகம் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 59அ, பாகம்: 165, 166, 168. இடம்: எஸ்.எம். நகர், பல்லவன் சாலை, சென்னை-2.

எழும்பூர் வடக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 77, பாகம்: 41,40,42

எழும்பூர் தெற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 58அ, பாகம்: 21, 22, 23, 24, 25, இடம்: A.P.சாலை, ராட்லர் தெரு, சூளை.

திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 74, பாகம்: 38, இடம்: எண்.21, நியு டேங்க் பன்ட் ரோடு, ஓட்டேரி.

மாலை: 4.30 மணி: வட்டம் 74, பாகம்: 39, இடம்: எண்.57, முதல் தெரு, நேரு ஜோதி நகர், அயனாவரம்.

மாலை: 5.00 மணி: வட்டம் 74, பாகம்: 40, இடம்: எண்.26A, சாஸ்திரிநகர், மங்களபுரம்.

மாலை: 5.30 மணி: வட்டம் 74, பாகம்: 41, இடம்: எண்.439D, 6வது தெரு, பணந்தோப்பு காலனி, அயனாவரம்.

மாலை: 6.00 மணி: வட்டம் 74, பாகம்: 42, இடம்: எண்.442D, 11வது தெரு, பனந்தோப்பு காலனி, அயனாவரம்.

மாலை: 6.30 மணி: வட்டம் 74அ, பாகம்: 33, இடம்: புதிய வாழைமாநகர், கூடைபந்து மைதானம்

மாலை: 7.00 மணி: வட்டம் 74அ, பாகம்: 34, இடம்: புதிய வாழைமாநகர், கூடைபந்து மைதானம்.

மாலை: 7.30 மணி: வட்டம் 74அ, பாகம்: 35 இடம்: பாஷ்யம் 1வது தெரு, ஓட்டேரி.

மாலை: 8.00 மணி: வட்டம் 74அ, பாகம்: 36 இடம்: பாஷ்யம் 2வது தெரு, ஓட்டேரி.

மாலை: 8.30 மணி: வட்டம் 74அ, பாகம்: 37 இடம்: குளக்கரை சாலை, ஓட்டேரி.

மாலை: 9.00 மணி: வட்டம் 74அ, பாகம்: 82 இடம்: செல்வபெருமாள் கோயில் தெரு, ஓட்டேரி.

திரு.வி.க.நகர் தெற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 75, பாகம்: 49, 50, 51

மாலை: 4.30 மணி: வட்டம் 75அ, பாகம்: 65, 66, 67, 68

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 97, பாகம்: 165, 167. இடம்: வெள்ளாள தெரு, 1,2,3 சந்து, வெள்ளாள தெரு 1 முதல் 60 வரை

மாலை: 4.30 மணி: வட்டம் 98ஆ, பாகம்: 211, 212, 213. இடம்: K.H.ரோடு

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 94, பாகம்: 15, 19, 49. இடம்: சிவன் கோயில் தெரு மாடவீதி, ரெட் ஹில்ஸ் சாலை, பாரதிநகர் 1வது தெரு.

மாலை: 4.30 மணி: வட்டம் 94ஆ, பாகம்: 29,35,36. இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ணா நகர், ராஜமங்கலம் 5வது தெரு, ராஜமங்கலம் மெயின்ரோடு.

அம்பத்தூர் வடக்கு பகுதி.

மாலை: 4.00 மணி: வட்டம் 79அ, பாகம்: 109. இடம்: திருமூர்த்தி தெரு, இ.பி.கால, ராம் நகர்

மாலை: 4.30 மணி: வட்டம் 79, பாகம்: 4. இடம்: கலைவாணர் தெரு, ஓரகடம்

மாலை: 5.00 மணி: வட்டம் 80, பாகம்: 91. இடம்: சித்தொரகடம் கம்பர் தெரு

மாலை: 5.30 மணி: வட்டம் 80, பாகம்: 92. இடம்: விஜயலட்சுமி தெரு

மாலை: 6.00 மணி: வட்டம் 81, பாகம்: 124. இடம்: கே.கே.ரோடு

மாலை: 6.30 மணி: வட்டம் 81, பாகம்: 125. இடம்: மாயா தெரு

மாலை: 7.00 மணி: வட்டம் 85, பாகம்: 155. இடம்: ஜி.என்.ஜி தெரு, வரதராஜபுரம்

மாலை: 7.30 மணி: வட்டம் 85, பாகம்: 156. இடம்: ஓ.வி.அழகேசன் தெரு, வரதராசுபுரம்.

மாலை: 8.00 மணி: வட்டம் 86, பாகம்: 212. இடம்: மலையத்தம்மன் கோவில் 1வது தெரு

மாலை: 8.00 மணி: வட்டம் 86, பாகம்: 213. இடம்: மலையத்தம்மன் கோயில் 2வது தெரு

அம்பத்தூர் தெற்கு பகுதி.

மாலை: 5.00 மணி: வட்டம் 88, பாகம்: 271. இடம்: வடக்கு மாடவீதி

மாலை: 5.00 மணி: வட்டம் 93, பாகம்: 335. இடம்: 1வது விளாக் 5வது தெரு, முகப்பேர் கிழக்கு

மாலை: 5.30 மணி: வட்டம் 88, பாகம்: 272. இடம்: டி.வி.எஸ்.நகர் மெயின்ரோடு

மாலை: 6.00 மணி: வட்டம் 89, பாகம்: 251. இடம்: பாடசால தெரு, சத்யா நகர்

மாலை: 6.00 மணி: வட்டம் 90, பாகம்: 302. இடம்: சௌந்தர்யா காலனி, ரோகினி பிளாட்ஸ்

மாலை: 6.00 மணி: வட்டம் 90, பாகம்: 303. இடம்: சௌந்தர்யா காலனி, ரோகினி பிளாட்ஸ்

மாலை: 6.30 மணி: வட்டம் 89, பாகம்: 252. இடம்: சர்ச் தெரு, சத்யா நகர்

மாலை: 6.30 மணி: வட்டம் 87, பாகம்: 284. இடம்: வன்னிய தெரு, 5வது குறுக்கு தெரு, பாடி

மாலை: 6.30 மணி: வட்டம் 87, பாகம்: 287. இடம்: தெற்குமாடவீதி, பாடி.

அம்பத்தூர் கிழக்கு பகுதி.

மாலை: 5.30 மணி: வட்டம் 84, பாகம்: 185. இடம்: சுமித்ரா தெரு, பெரியார் நகர், கொரட்டூர், சென்னை-80.

மாலை: 6.00 மணி: வட்டம் 84, பாகம்: 186. இடம்: தில்லை நகர், விரிவாக்கம், கொரட்டூர், சென்னை-80.

மாலை: 6.30 மணி: வட்டம் 83, பாகம்: 47. இடம்: அக்ரஹாரம், கண்டிகை, கொரட்டூர், சென்னை-79.

மாலை: 7.00 மணி: வட்டம் 83, பாகம்: 48. இடம்: அக்ரஹாரம், சீயாத்தம்மன் கோயில் தெரு, கொரட்டூர், சென்னை-79.

மாலை: 7.30 மணி: வட்டம் 83அ, பாகம்: 37. இடம்: முருகன் கோயில் தெரு, விவேகானந்தர் நகர், கொளத்தூர், சென்னை-99.

மாலை: 8.00 மணி: வட்டம் 83அ, பாகம்: 38. இடம்: 23, வினாயகர் கோயில் தெரு, வனசக்தி நகர், கொளத்தூர், சென்னை-99.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மன்றத்தில் இந்தியா தனது மூன்றாம் கட்ட

காலநிலை மாற்ற இலக்கு அறிக்கையை சமர்ப்பிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

நாடாளுமன்றத்தில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, டிச.16-

ஐநா மன்றத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியா தனது மூன்றாம் கட்ட காலநிலை மாற்ற இலக்கு (Nationally Determined Contribution) அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இது குறித்த முக்கிய விவரங்களைக் கேட்டு, ஒன்றிய சுற்றுச் சூழல் துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வியை எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு வழக்கம்போல ஆழமான தகவல்கள் எதுவுமின்றி சம்பிரதாயமான பதில்களை அளித்து ள்ளது ஒன்றிய அரசு. குறிப்பாக, இந்த இலக்கை அடைய பாரீஸ் ஒப்பந்தத்தின் படி வளர்ந்த நாடுகளிடம் இருந்து பெறப்படவுள்ள நிதி பற்றி மூச்சுக்கூட விடாமல் தவிர்த்துள்ளது.

இன்னும் இறுதிசெய்யப்படாமல் இருக்கும் காலநிலை மாற்ற அறிக்கை:

தற்போதைய அறிக்கை, 2035 வரைக்குமான மூன்றாம் கட்ட காலநிலை மாற்ற இலக்குகளை அறிவிப்பது. முதல் இரண்டு கட்டங்கள், 2015 2030, 2020 2030.

இதைச் சமர்ப்பிப்பதற்கான கெடு, இந்த ஆண்டு இறுதியோடு முடிவடைகிறது. ஆனால், இந்த அறிக்கையை இன்னும் இறுதி செய்யாமல் இருப்பதாக ஒன்றிய அரசு கூறியுள்ளது. இது நிர்வாகத் தாமதம் மட்டுமல்ல, தனக்கிருக்கும் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் போக்கு.

காலநிலை நிதி குறித்து பதில் அளிக்க முற்றிலும் மறுப்பு:

காலநிலை மாற்ற இலக்குகள், பெரும் நிதித் தொகை கொண்டு எட்டப்பட வேண்டியவை. இது வளர்ந்து வரும் நாடுகளுக்கு நிதிச்சுமை ஏற்படுத்தும் என்பதற்காக, காலநிலை மாற்றத்திற்கு காரணமாக அமைந்த வளர்ந்த நாடுகள் நிதியளிக்க வேண்டும் என்று பாரீஸ் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டது.

இந்த தொகை இந்தியாவுக்கு நியாயப்படி வர வேண்டியது. தற்போது மூன்றாம் கட்ட இலக்கிற்கும் அது வரவேண்டும். இந்த தொகையாக எவ்வளவு நிர்ணயிக்கப்படப் போகிறது என்ற கேள்வியை ஒன்றிய அரசு தவிர்த்துள்ளது. மேலும், இப்படி பெறப்படும் தொகையை சரியாக திட்டங்களுக்கு செயல்படுத்தப்படுத்துவதை கண்காணிக்க அமைப்புகளை உருவாக்குவதைப் பற்றியும் பதிலளிக்க மறுத்துள்ளது.

இது அலட்சியம் மற்றும் மோசமான நிர்வாகத்தின் எடுத்துக்காட்டு.

கெடு நெருங்கி வரும் நிலையில், மூன்றாம் கட்ட காலநிலை மாற்ற இலக்குகள் குறித்த அறிக்கையை விரைவில் இறுதிசெய்ய வேண்டும். அதில் வளர்ந்த நாடுகளிடம் இம்முறை கேட்கப்போகும் நிதி எவ்வளவு என்பது குறித்தும், அவற்றை திட்டங்களுக்கு பயன்படுத்துவதை கண்காணிக்க ஏற்படுத்தவுள்ள அமைப்பு குறித்தும், ஒன்றிய அரசு வெளிப்படையாக பேச வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

ஜி.ஏழுமலை தலைமை! இ.மணிமேகலை ஏற்பாடு! ஜே.ஜே.எபினேசர் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை!

47வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்! நலஉதவிகள்!

இந்திரகுமார் தேரடி சிறப்புரை! ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, டிச.16-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 47வது வட்ட திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ் நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (16.12.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில் மீனம்பாள்நகர் பள்ளிக்கூடம் அருகில் கொருக்குப்பேட்டை, செ21ல் நடைபெறுகிறது.

வட்ட கழக செயலாளர் ஜி.ஏழுமலை தலைமை வகிக்கிறார். மகளிர் தொடண்டர் அணி பகுதி அமைப்பாளரும் 47வது வார்டு மாமன்ற உறுப்பினர் இ.மணிமேகலை நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை செய்துள்ளார்.

ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதிச்செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாஸ் டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், ஆர்.ராஜன், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், மு.இரவி, ஜெ.கன்னியம்மாள், ஸ்டில் ஏ.மோகன், டைகர் பி.எஸ்.வீரா, எம்.குப்புசாமி, ஜி.லட்சுமணன், எம்.வீரத்திலகம், ஏ.அமுலு, ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் இந்திரகுமார் தேரடி சிறப்புரையாற்றுகிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

பகுதிச்செயலாளர் இரா.லட்சுமணன், கே.வி.லோகேஷ், என்.மருதுகணேஷ், டாக்டர் கலைவாணன், ஏ.டி.மணி, எம்.எஸ்.பரசுராமன், நேதாஜி யு.கணேசன் எம்.சி, எம்.விமலா, ஏ.மோகன், இர.பொன்இளவரசன், இ.ரவிக்குமார், எஸ்.எஸ்.மணி, கணேசன், க.முருகன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

பி.ராம்குமார், அம்பேத் எம்.தியாகு, ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

ஹஜ் இல்லம் அமைக்க அடிக்கல்: அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில்

முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, டிச.16-

ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் என். சந்திரன் எம்.சி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய பெருங்குடி மக்களுக்காக ஹஜ் இல்லம் அமைக்க அடிக்கல் நாட்டிட வருகை தரும் சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இன்று (16.12.2025 வ்வாய்கிழமை) காலை 10.30 மணிக்கு நங்கநல்லூர் மெட்ரோ நிலையம் அருகில் ஜி.எஸ்.டி.சாலையில்

மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் மாபெரும் வரவேற்பு வழங்க உள்ளதால்,

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர்,பாக முகவர்கள்(BLA-2), கழக தோழர்கள், கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர், மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எழிலன் நாகநாதன் - வினோத் வேலாயுதம் - சைதை சாதிக் பங்கேற்பு!

109 ‘அ’ வட்டத்தில் - “என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி” கூட்டம்!

வட்டச் செயலாளர் ச.டேவிட் இன்பராஜ் அறிக்கை!

சென்னை, டிச.16-

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி 109 (அ) வட்டச் செயலாளர் ச.டேவிட் இன்பராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கழக தலைவர் - தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் அமைந்துள்ள 109 (அ) வட்டத்தில் உள்ள BLA-2 மற்றும் BLC ஆகியோர்களுக்கு பாகம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி என் வாக்குச்சாவடி! வெற்றி வாக்குச்சாவடி! 109 (அ) வட்டத்தில் பாகம் 33, 34, 35, 36, 37 ஆகிய பாகங்களுக்கு கூட்டம் 109 ‘அ’ வட்ட செயலாளர் ச.டேவிட் இன்பராஜ் தலைமையில் இன்று (16.12.2025 - செவ்வாய்கிழமை) மாலை 6.00 மணியளவில் சென்னை, சூளைமேடு, (சூளைமேடு கல்வி நலன் அறக்கட்டளை அருகில்) வன்னியர் 2வது தெரு, என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், தேர்தல் பொறுப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

எனவே 109 (அ) வட்டத்திற்கு உட்பட்ட BLA2 மற்றும் BLC மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு 109 (அ) வட்டச் செயலாளர் ச.டேவிட் இன்பராஜ் அறிக்கை விடுத்துள்ளார்.

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி

118 வது வட்ட அவைத் தலைவர் க.அன்பழகன் மறைவு!

நே.சிற்றரசு – நா.எழிலன் – மா.பா.அன்புதுரை – மல்லிகா யுவராஜ் – கோ.யுவராஜ் அஞ்சலி!

சென்னை, டிச. 16 -

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்ட அவைத் தலைவர் புதுப்பேட்டை க.அன்பழகன் (வயது 63) அவர்கள் நேற்று முன்தினம் (14.12.2025 - ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 11 மணியளவில் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்ததும் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா. அன்புதுரை, வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ், 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (16.12.2025 - செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 1:30 மணி அளவில், அன்னாரின் இல்லமான எண். 47/10, பி.வி.கோயில் முதல் தெரு, (மாரிஸ் ஹோட்டல் எதிரில்) இருந்து புறப்பட்டு மயிலை இடுகாட்டில் தகனம் செய்யப்படுகிறது.